# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்

பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை

ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்

ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | திண்டுக்கல் | காலம் : | 10/09/2022 | முதல் | 14/09/2022 |
| அறிக்கை எண் : | 072/ 2022 | வெளியீட்டு நாள் : | 09/09/2022 | | |

## திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 33° - 36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24° - 25° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (04.09.2022 முதல் 08.09.2022) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 14-09-2022- 08.30 வரை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 04/09 | 05/09 | 06/09 | 07/09 | 08/09 | தேதி | நாள்-1 10/09 | நாள்-2 11/09 | நாள்-3 12/09 | நாள்-4 13/09 | நாள்-5 14/09 |
| 4.4 | 29.9 | 17.0 | 5.5 | 3.4 | மழை (மி.மீ) | 12 | 10 | 8 | 8 | 8 |
| 34 | 36 | 33 | 34 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 32 | 32 | 33 | 33 | 33 |
| 25 | 24 | 24 | 24 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 23 | 23 | 23 | 23 | 23 |
| 4 | 5 | 6 | 6 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 5 | 5 | 5 |
| 65 | 72 | 68 | 84 | 66 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 80 | 80 | 80 | 80 |
| 56 | 80 | 79 | 69 | 54 | | 70 | 70 | 70 | 70 | 70 |
| 4 | 6 | 2 | 17 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 12 | 12 | 12 | 12 | 12 |
| வட கிழக்கு | தென் கிழக்கு கு | தென் கிழக்கு கு | மேற்கு | வட மேற்கு | **காற்றின் திசை** | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 32°-33° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 23° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 12 கி.மீ வேகத்தில், தென்மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

மாவட்டத்தின் ஒருசில பகுதிகளில் மழை பெய்துள்ளமையாலும் தொடர்ந்து சில நாட்களுக்கு மழை எதிர்பார்க்கப்படுவதாலும் இதுவரை உழவுபணிகளை மேற்கொள்ளாதவர்களும் விதைக்க துவங்காத விவசாயிகளும் தற்போது உழவுபணிகள் (ம) விதைப்பு பணிகளை மேற்கொள்ளலாம்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள்** : மக்காசோளம், பருத்தி, கால்நடை.

மக்காசோளம்:

- மக்காசோள பயிரில் அடிச்சாம்பல் நோய் கட்டுப்படுத்த 1 எக்டேருக்க 2½ கிலோ சூடோமோனாஸ் ஃபு;ரசன்ஸ் அல்லது டிரைக்கோடெர்மா விரிடி இவற்றின் ஏதேனும் ஒன்றை மணலுடன் கலந்து நடவு செய்த 20 நாட்களுக்குப்பின் வயலில் இடவும்.

பருத்தி:

- பருத்தி வயலில் அடியுரம் இட இயலாத சூழ்நிலையில், விதைத்த 25 நாளில் உரமிடலாம்.
- இரகங்களுக்கு 50 சத தழை மற்றும் சாம்பல்ச் சத்தும், முழுமையான அளவில் மணி சத்தையும் அடியுரமாக இடவேண்டும்.
- எஞ்சியுள்ள தழை மற்றும் சாம்பல் சத்தை 40-45ம் நாள் இடவேண்டும்.

கால்நடை:

- கால்நடைகளைத் தாக்கும் குளம்பு சிதைவு நோய் தாக்குதல் பரவ வாய்ப்புள்ளது.
- இது எல்லா வயது கால்நடைகளையும் பாதித்தாலும், வயது முதிர்ந்த மாடுகளில் பாதிப்பு அதிகம் காணப்படும்.
- சுத்மில்லாத தொழுவத்தில் உள்ள ஈரமான சாணம், சேறு மற்றும் காலில் உள்ள புண்கள் ஆகிவைகளில் பாக்டீரியாக்கள் நன்கு தங்கி வளரும் இயல்புடையது.
- கால்நடை மருத்துவரை அணுகி சிகிச்சை அளிக்க வேண்டும்.